DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 203/2019

Prosecution witness PW - 1

Name …. **சிகாமணி**

Father's Name ....

Village ....

Taluk ....

Caste ....

Calling ....

Religion ....

Age ….

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 14th day of November 2025.

(எதிரிகள் ஆஜர்)

**குறுக்கு விசாரணை**

நான் எம்.எஸ் சி, எம்.எட் படித்திருக்கிறேன். இதே நீதிமன்றத்தில் ஒரு 307 வழக்கு இருந்தது என்றால் சரிதான். CC 33/2019 என்ற ஒரு வழக்கு செய்யாறு, நடுவர் குற்றவியல் நீதிமன்றத்தில் எதிரிகள் கொடுத்த வழக்கு என்றால் சரிதான். எதிரிகள் என் சொந்தகாரர் என்றால் ஒரே ஊரை சேர்ந்தவர்கள், ஆனால் உறவினர் இல்லை. 4ம் எதிரியின் தங்கை சோனியா என்றால் சரிதான். எனது நண்பர் ராஜா மேற்படி சோனியாவை வீட்டிற்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். மேற்கண்ட பிரச்சனை காரணமாக எதிரிக்கும், ராஜாக்கும் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தது. இதற்கிடையில் மேற்படி ராஜா வீட்டின் அருகில் மேற்படி இந்த விவகாரம் குறித்து பேசினார்கள் என்றால் இரண்டு வீ்டு தள்ளி பேசினார்கள் அப்போது மணி இரவு 8.45 இருக்கும். நான் எதிரிகளை ஆபாசமாக அடித்தேன் என்று வழக்கு எதிரிகள் என் மீது தொடர்ந்தார்கள் என்றால் வழக்கு

போட்டார்கள், ஆனால் நான் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு உள்ளே வந்து அடித்து சென்றார்கள். 1 முதல் 4 எதிரிகள் என் அம்மாவை அடித்து தகாத வார்த்தைகளால் திட்டி எதிரிகள் கொடுத்த புகார் மீது எங்கள் மீதுவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, அவ்வழக்கு தற்போது நடந்தது வருகிறது என்றும், அவ்வழக்கில் இருந்து தப்பிபதற்கு இவ்வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தான் ஆயுதம் கொண்டு எதிரிகளை தாக்கினேன் என்றால் சரியல்ல, எதிரிகள் தான் தாக்கி காயம் உண்டாக்கினார்கள். எதிரிகள் செய்யாறு, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள். நான் எதிரிகளை தாக்கிவிட்டு மருத்துவமனையில் நான் வழக்கிற்காக படுத்துக்கொண்டேன் என்றாலும், என் அம்மாவிற்கு எழுத படிக்க தெரியும், இருந்தும் நான் புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. என் அம்மாவை நான் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். புகாரை சம்பவத்திற்கு அடுத்த நாள் காலை கொடுத்தேன். போலிசார் என்னை என் அம்மாவை சென்னையிலும், எங்களை என் ஊரிலும் விசாரணை செய்தார்கள். என் அம்மாவை போலிசார் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. சிறப்பு உதவி ஆய்வாளர் அலேக்ஸ் என்பவர் என்னை விசாரணை செய்தார். எதிரிகள் மீது முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**